சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 24-ம் நாள் புதன்கிழமை

இடைமனு எண்.03/2025

இன்

அசல் வழக்கு எண்.175/2021

....

அய்யணன் சக்கரவர்த்தி ...மனுதாரர்/வாதி

/எதிர்/

பாண்டியம்மாள் ..எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

1. தவசீஸ்வரி

2. ஜோதி

3. பூமாதேவி ...எதிர்மனுதாரர்கள்/

proposed 2 முதல் 4 பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 10.06.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.C.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பா.மருது அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜரில்லாததால் அவரை தோன்றாதரப்பினராக தீர்மானித்தும், எதிர்மனுதாரர்கள்/ proposed 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாத நிலையிலும், மனுதாரர் தரப்பு வழக்குரைஞரின் வாதுரையைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**<u>உத்தரவு</u>**

தாவா பிராதை திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் சி.பி.சி ஆர்டர் 6 ரூல் 17, 18-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>

தாவா வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளை கட்சிக்காரர்களாக சேர்க்கக் கோரிய மனுவில் இந்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து மேற்படி மனுவும் I.A.No.1/2022 என்று நம்பர் ஏற்பட்டு மேற்படி மனுவும் கடந்த 10.04.2023-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே தாவா பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவ்வாறு செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு பாதகமும் ஏற்படக் கூடியதில்லை. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும். ஆகவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிடவேண்டும்.

3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்உரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜராகாததால் அவர் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டு ஒருதலை பட்சமாக்கப்பட்டுள்ளார்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

6. மனுதாரர் தரப்பில் தாவா வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளை கட்சிக்காரர்களாக சேர்க்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது பிராதை திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு மனுவை ஆட்சேபணை செய்ய எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகவும் இல்லை. தாவா மனுவினை அனுமதிப்பதால் தாவா வழக்கின் தன்மை மாறிவிடாது என்பது தாவா திருத்த மனு விபரங்களை பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. தாவா மனு மனுதாரர் கோரியபடி அனுமதிக்கப்

படாவிட்டால் மனுதாரருக்கு அவரது வழக்கு சங்கதியை நிரூபித்திட போதிய வாய்ப்பு மறுக்கப்பட்டதாக ஆகிவிடும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது. தாவா மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட போவதாக மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். அசல் வழக்கானது இருதரப்பு விசாரணைக்குப்பின்தான் தீர்மானிக்க இயலும். எனவே நீதியின் நலன் கருதி இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக தாவா மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 24-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.06.24 17:40:57 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்
தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.06.24 17:41:02 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.03/2025 in
O.S.No.175/2021
**Draft/Fair/Order**
24.06.2026.